திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இளைஞர் எழுச்சி நாளை பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் டி. புஜ்ஜி ராமகிருஷ்ணன், ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு நாசர் கலந்துகொண்டு பெண்களுக்கு புடவை விளையாட்டு அணிகளுக்கு பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம். எல். ஏ. பேச்சாளர்கள் கரூர்முரளி, கவின்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, வி.ஜி.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், சன் பிரகாஷ், டி,தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், தங்கம் முரளி, எம்.பார்க்கத்துல்லகான், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வே.தியாகராஜன், வி.ஜெ.உமாமகேஸ்வரன், டி.தென்னவன், டி.பிராங்கிளின், மதுரைவீரன், எஸ்.மனோகரன், விமலாகுமார், எஸ்.வேலு, கா. முகமது ரஃபிக், கபிலன், கருணாகரன், நாகராஜன், முரளி கிருஷ்ணன், ஹரிகிருஷ்ணன், பாலாஜி, சரத்பாபு, தமிழ்வாணன், பலராமன், ஜெஸ்டின் பால், சந்தோஷ், கே.சி.சதீஷ், உள்பட பலர் உள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - வேங்கை சந்திரசேகரன், கைர் எஸ்.திவ்யா சிறப்புரை

சைதை 172-வது வட்டத்தில் உதயநிதி உதயநாள் கூட்டம்!

இரா.துரைராஜ் எம்.சி. முன்னிலை! வட்டச் செயலாளர் எஸ்.பாட்சா தலைமை!

சென்னை, டிச. 18 -

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172-வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் தெருமுனைக் கூட்டம் இன்று (18.12.2024) மாலை 6 மணிக்கு நேருநகர் கருமாரியம்மன் கோயில் அருகில் வட்டச் செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா தலைமையில் நடைபெறுகிறது- இக்கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ், இ.முருகேசன், க.உமாபதி, வே.முருகன், ஜி.யோவான், ஜி.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.வி.ஜோய், எஸ்.ஆசிக் அலி, உ.திருவேங்கடம், இ.ஹேமலதா, எல்.பரமன், இரா.மலர்விழி, டி.அன்பு, எம்.பி.சகாதேவன், என். கே.வெங்கடேசன், பொன். அனுமந்தன், எஸ்.அசோக்குமார், மோ.குமரவேல் ஆகியோர் வரவேற்கின்றனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், கழகப் பேச்சாளர்கள் வேங்கை சந்திரசேகரன், கைர் எஸ்.திவ்யா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், பரிதி இளம்சுருதி, சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு. பாக்கியலட்சுமி, வட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.செந்தில், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, சைதை கிழக்கு பகுதி மாவட்ட பிரதிதிகேள் : வே.ரமேஷ்குமார், டி.வி.நரசிம்மன், என்.நந்தகோபால், எஸ்.ராதாக்கிருஷ்ணன், எஸ். ஜெ.சலாம், இரா. சுதாபிரியன், கோட்டூர் கோ.சண்முகம் மற்றும், கோட்டூர் பிரகாஷ், ஏ.மஜித், கேட்டூர் ந.பாபு, கே.எம். எஸ்.கணேசன், மு.மகேஷ்லாரண்ஸ், க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன், ஜ கே.பாலா, தி.கோகுலன், ஸ்ரீசுல எஸ்.ஜெயராமன், பூ. ஜெயவேல், ஆர்.ரவிமூர்த்தி, எஸ்.சம்பத்குமார், ஆரே குமார்,, ஆர்.சரவணன், மு. செல்வம், டி.ஏ.பீட்டர், த.தினகர்,தி.சத்யேந்திரன், வி.மகேஷ்வரன், மு.ரமேஷ், ெஜ. சின்னதுரை, வீ.நவீன்குமார், க.உசேன், டி.டி.அரசு, ஏ.மகாலிங்கம், எல்.முருகன், எம்.அப்துல் ரஹ்மான், எஸ்.சரவணன், ப.தமிழ்மணி, அப்துல்அமீஸ், எஸ்.சரவணன், ப.தமிழ் மணி, கோ.பாஸ்கரன், துரை பிரபாகரன், ஜி.ஆறுமுகம், முகம்மது ரபீக், உராமக்கிருஷ்ணன், மு.வெங்கடேசன், கௌஸ்ஷரிப், கி.ரமேஷ், வி.அரிக்கிருஷ்ணன், என். தாமோதரன், பி.பரபு, சி. ஜெயராமன், கௌரிசங்கர், இ.தயாளன், ஆர். சுப்பிரமணி, என்.சேகர்,

எலிசமெத்ராணி, சு.உமா, ஆர்.ராஜன்பாபு, எம்.சங்கரி, ச.மீனா, எஸ்.லோகிதாஸ், எஸ்.ஆர்.விநாயகம், ஆர்.சுப்பிரமணி, அ.பரமசிவம், பூ.பீம்ராஜ், ஆர்.ராஜசேகர், பாலாஜி, கோ.மோகன்தாஸ், எஸ்.லோகனாதன், ப.நித்யானந்தம், எம்.டி.நீலகண்டன், செல்வக்குமார், கே.டில்லி முகமது, காசிம் ரியாஸ், ஆர். பாஸ்கர், திருப்பதிராஜ், சதீஷ், சாகுல்அமீது, சுல்தான் பாஷா, செண்பகப்பாண்டியன், எத்திராஜ், இ.தாமு, தா.பாலா, ஆர்.வேலு, என். ேலாகனாதன், கே.ராமச்சந்திரன், பி.மாரியப்பன், எம்.அராபதி,சி. மகேஷ், எம்.சிவகுமார், ப. கிருஷ்ணமூர்த்தி,அருள்செல்வம், கணபதி பிரகாஷ், த. கே.த.வெங்கடேசன், எஸ். ராஜேந்திரன், பி.பி.நாகராஜ், டி.வழிவிட்டான், எஸ்.உமா, ஜி.குணசேகரன், ஆர்.சக்திவேல், எம்.நாராயணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! இன்று (18-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

வ. எண்	வட்டம்	தலைமை	இடம்	சொற்பொழிவாளர்கள்
1	118அ	எஸ்.என்.கே.ராமன் வட்டக் கழக செயலாளர்	இளங்கோ சாலை அண்ணா அறிவாலயம் அருகில், தேனாம்பேட்டை சென்னை–18	பவானி கண்ணன் தலைமைக்கழக பேச்சாளர் தினேஷ் தலைமைக் கழக இளம் பேச்சாளர்
2	116 வது	எஸ். சசிகுமார் வட்டக் கழக செயலாளர்	வி.ஆர்.பிள்ளை தெரு, மாட்டான் குப்பம், திருவல்லிக்கேணி, சென்னை–5	சிவாஜி கிருஷ்ணமூர்த்தி தலைமைக்கழக பேச்சாளர் பார்கவி தலைமைக் கழக இளம் பேச்சாளர்

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நே. சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி 122வது வட்டத்தில் மாவட்ட பிரிதிநிதி வேன் சிவா தலைமையில், 122வது வட்டக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் முன்னிலையில், தேனாம்பேட்டை, ஆலையம்மன் கோவில் அருகில் 15.12.2024– ஞாயிற்றுக்கிழமை அன்று மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி கழக கொடியேற்றி மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள்(பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

1.ஒரே நாடு ஒரே தேர்தல் - நாடாளுமன்றத்தில் திமுக எதிர்ப்பு! மைனாரிட்டி பாஜக இந்த மசோதாவை சட்டமாக்க முடியாது!

டி. ஆர். பாலு எம்.பி. மக்களவையில் பேச்சு

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை வலியுறுத்தும் அரசியலமைப்பு 129வது சட்ட திருத்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக பொருளாளரும் திமுக மக்களவை குழுத்தலைவருமான டி. ஆர். பாலு எம்.பி. அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியதாவது:

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பதுபோல ஒரே நாடு ஒரே தேர்தல் முறை கூட்டாட்சிக்கு எதிரானது. ஜனநாயகத்தை அழிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இம்மசோதாவை நான் ஆதரிக்க முடியாது. ஒன்றிய பாஜக அரசிற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் இந்த மசோதாவை எப்படி சட்டமாக்க முடியும்?

தொடர்ந்து ஐந்தாண்டுகள் ஆட்சி செய்வதற்காகவே வாக்காளர்கள் ஒரு அரசை தேர்தெடுக்கிறார்கள். அது வாக்காளர்களின் அடிப்படை உரிமை. ஒரே தேர்தல் முறை மூலமாக அவ்வுரிமையை இந்த மசோதா பறிக்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையில் தேர்தல் நடத்த ஒவ்வொரு முறையும் 13981 கோடி ரூபாய் அரசுக்கு கூடுதலாக செலவாகும். மேலும் 9284 கோடி ரூபாய் கூடுதல் வாக்குப்பதிவு எந்திரங்கள் வாங்க மட்டுமே செலவு செய்ய வேண்டும். இது தேவையில்லாதது.

நாடு முழுவதும் அனைத்து கட்சிகளின் கருத்து ஒற்றுமையுடன் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது நடைமுறை சாத்தியமில்லை என 2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழுவின் 79வது அறிக்கை முடிவு செய்திருக்கிறது என்பதை இங்கே நினைவூட்டுகிறேன்.

மேலும் ஒன்றிய அரசு நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் இந்த மசோதாவை முதலில் விவாதித்துவிட்டு மீண்டும் அவையில் விவாதத்திற்கு எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. தொழில்துறை ஸ்மார்ட் சிட்டி ஆகிறதா தூத்துக்குடி?

கனிமொழி கருணாநிதி

தேசிய தொழில் வழித்தட மேம்பாட்டு திட்டத்தை (NICDP) செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்கள் குறித்து மக்களவையில் திமுக துணைப் பொதுச்செயலாளரும் தூத்துக்குடி மக்களவை உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் நகரங்களை தொழில் துறை ஸ்மார்ட் சிட்டி ஆக்குவதற்காக தேர்வு செய்யும் அளவுகோல்கள் யாவை என்றும் தூத்துக்குடி இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வழிவகை செய்யவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3. மண்வளத்தை காக்க நடவடிக்கை என்ன?

ஆ. இராசா

பல்வேறு காரணங்களால் நாட்டில் 30% விவசாய நிலங்களின் வளம் பாதித்திருக்கிறது என்றும் அதை தடுப்பது மற்றும் சீர் செய்வதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திமுக துணைப்பொதுச் செயலாளர் ஆ. இராசா மக்களவையில் பேசியுள்ளார்.

மேலும் சீரான உரங்களைப் பயன்படுத்துதல், இயற்கை வேளாண்மை மற்றும் முறையான மண் மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் சீரழிந்து வரும் மண்வளத்தை மீட்டெடுக்க முடியும் என அறிவுறுத்தியுள்ளார்.

4.பயனளிக்கிறதா கிராமப்புற திறன் பயிற்சி திட்டம்?

சி. என். அண்ணாதுரை

தீன்தயாள் உபாத்யாயா கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின்(DDU-GKY) கீழ் பயிற்சி பெற்று பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையை துறை வாரியாக வெளியிடுமாறு திருவண்ணாமலை தொகுதி திமுக மக்களவை உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கோரியுள்ளார். இத்திட்டத்தின்கீழ் பணியமர்த்தப்பட்ட நிரந்தர பணியாளர்கள் எத்தனை மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள பெண்கள், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை விவரங்கள் ஆகிவற்றையும் வெளியிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

5. பண்பாட்டுச் சின்னங்களை பாதுக்காக்க நடவடிக்கை என்ன?

டி.எம். கதிர் ஆனந்த்

நாடாளுமன்றத்தில் திமுக வின் வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

தென்னிந்தியாவில் உள்ள புராதன நினைவுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்க, ஒன்றிய அரசு போதுமான நிதியை வழங்குகிறதா?

அப்படியானால், கடந்த ஐந்தாண்டுகளில் பல்லவர்கள், சோழர்கள், இடைக்காலப் பாண்டியர்கள், சேரர்கள், நாயக்கர் வம்சத்தினர் காலத்து பழங்கால கோயில்களின் புராதன நினைவுச்சின்னம் மற்றும் வம்ச வாரியான விவரங்கள் யாவை?

இந்தப் புராதனமான பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் கோவில்களின் டிஜிட்டல் மேப்பிங்கிற்காக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

சமீபகால அறிவியல் தொழில் நுட்பமான டிஜிட்டல் தொழில் நுட்பங்களை புகுத்திட, பயன்பாடு மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஏதேனும் நிபுணர் குழுவை ஒன்றிய அரசு அமைத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

6.கை கொடுத்ததா கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி?

தே.மலையரசன்

கடந்த மூன்றாண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட கடல்சார் பொருட்களின் அளவு மற்றும் மதிப்பு எவ்வளவு என கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியாவிலிருந்து அதிக அளவில் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள் யாவை, புதிய சந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா, புதிதாக நிர்ணயம் செய்யப்பட்ட ஏற்றுமதி இலக்குகள் என்ன, கடல்சார் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள், இந்திய கடல்சார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், கடல்சார் பொருட்களின் பதப்படுத்தும் திறன் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் என்ன? கடல்சார் பொருட்கள் சர்வதேச ஏற்றுமதி தரநிலைகளை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என அனைத்து விவரங்களையும் வெளியிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

இராமாபுரம் எம்.ராஜ்பிரபாகரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

மதுரவாயல் 155 வது வட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் இனிப்பு!

பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, டிச. 18 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி மாணவர் அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி மாணவர் அணி இராமாபுரம் எம்.ராஜ்பிரபாகரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 155 வது வட்டத்தில் 648 பள்ளி மாணவச் செல்வங்களுக்கு நோட்டு புத்தகங்கள், இனிப்பு வழங்கும் விழா (17.12.2024 செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கு, இராமாபுரம், அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார் எம்.சி, 155 வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.ராஜு, வட்டக் கழகச் செயலாளர் ராதாசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இதில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், ஆசிரியர் பெருமக்கள், மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டனர்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின்

இரண்டாம் கட்டப் பயணம் பழநியில் தொடங்கியது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 18-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம் நேற்று (17.12.2024) பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தொடங்கியது. என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மூத்த குடிமக்கள் பங்கேற்கும் வகையில் ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும், அறுபடை வீடுகளுக்கும் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது.

1008 மூத்த குடிமக்கள் பயன்பெற்றுள்ளனர்!

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட மூத்த குடிமக்கள் அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு இப்பயணத்தில் 1,008 மூத்த குடிமக்கள் பங்கேற்று பயன்பெற்றனர். இத்திட்டத்திற்காக அரசு ரூ.1.58 கோடி நிதி வழங்கியுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இந்தாண்டிற்கான அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்டப் பயணம் 200 மூத்த குடிமக்களுடன் கடந்த 26.11.2024 அன்று கந்தகோட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இரண்டாம் கட்ட பயணமானது திண்டுக்கல், திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மண்டலங்களை சேர்ந்த 200 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் நேற்று (17.12.2024) பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தொடங்கியது.

இக்குழுவினர் பழநியில் புறப்பட்டு திருச்செந்தூர், பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, திருத்தணி ஆகிய திருக்கோயில்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்கின்றனர். இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுடன் போர்வை, துண்டு, குளியல் சோப், டூத் பிரஷ், பேஸ்ட், தேங்காய் எண்ணெய், போன்ற பொருட்கள் அடங்கிய பயணவழிப் பைகள் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மேயர் ஆர்.பிரியா, மேயர் 2024–25 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, நேற்றுமுன்தினம் (16.12.2024) மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதாரப் பணியாளர்களுக்கு மருத்துவம் குறித்து பயிற்சி அளிக்க ஏதுவாக மடிக்கணினியுடன் கூடிய ஒளிப்படக்காட்டிக் கருவிகளை (Laptop with LCD Projector) ரிப்பன் கட்LL அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.